**வலிகாமம் மேற்கு பிரதேசசபை**
**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 17 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 17 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்படாத 05 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு இறுதிக் கணக்குக்குக் கொண்டு வரப்பட்டுள்ளமையினால் ரூபா 2,932,415 இனால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையின் பயன்பாட்டிலுள்ள 03 காணிகட்டடங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டிருக்காமையினால் இறுதிக் கணக்குகளில் காணி கட்டடங்களின் பெறுமதி குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு, நட்டங்கள் சேதங்கள் பதிவேடு, கடன்கொடுத்தோர் பதிவேடு, அளவைப் புத்தகம், காணி விற்பனவு பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உரிய நிதி வருடத்தில் வழங்கப்பட்ட ரூபா 429,634 பெறுமதியான முற்பணங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சம்பளம் ரூபா 136,723 உரிய ஊழியர்களுக்கு கொடுக்கப்படாது உள்ளது.

**1.3.5 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987ம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் 148 (1) | வாகனங்கள், விலங்குகள் மீதான வரியை விதிப்பதற்கு பிரதேசசபைக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ள போதிலும் அந்த வாகனங்கள், விலங்குகள் மீது குறித்துரைக்கப்பட்ட வீதங்களில் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| (i) நிதிப்பிரமாணம் 315 | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அரசாங்க சொத்துக்கள் பாதுகாப்பான கட்டுக்காப்பில் வைக்கப்பட்டு பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 2,720,145 தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 28,045,949 விளைந்திருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 26,888,493 காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டுக்கான நிதிப்பெறுபேறுகள் ரூபா 1,157,456 ஆல் அதிகரிப்பு ஒன்றினை காட்டுகின்றது.

**2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 104,850,307 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 91,994,462 விளைந்திருந்தது. இதனால் மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 12,855,845 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| ஆதனவரிகள் | 2,571 | 2,235 | 4,579 |
| குத்தகை வாடகைகள் | 13,271 | 10,660 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,816 | 1,654 | - |
| ஏனைய வருமானம் | 59,336 | 65,601 | 70,783 |
| **மொத்தம்** | **76,994** | **80,150** | **75,362** |

### 2.3.2 ஆதனவரி

ரூபா 4,579,111 இற்கான நிலுவை ஆதனவரி நிலுவையினை மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானம்

தண்ணீர் வரி நிலுவை ரூபா 184,684 மீளாய்வாண்டில் சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 452,582 தொகை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டுவரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 63,618,339 இனை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூலக நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 60,000 குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) சபையில் 100 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 97 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் 07 பதவியினர் பற்றாக்குறையாக உள்ளதுடன் 04 பதவியினர் மேலதிகமாகவும் உள்ளனர்.

(இ) வருடமொன்றிற்கு குறைந்தது 04 கணக்காய்வு முகாமைத்துவக்குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் எனினும், மீளாய்வாண்டில் 02 கணக்காய்வு முகாமைத்துவக்குழுக் கூட்டங்களே நடைபெற்றுள்ளது.

**3.2 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 884,992 பெறுமதியான கிராமியச்சந்தை பயன்படுத்தப் படாமலுள்ளது.

(ஆ) சபையின் தலைமை அலுவலக கட்டிடம் 2013 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாடற்றுக் காணப்படுகின்றது.

(இ) 2015 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட முன்பள்ளி பயன்படுத்தப்படாதுள்ளது.

(ஈ) பிக்கப் வாகனமும் இழுவை நீர்த்தாங்கியும் சபையினால் பயன்படுத்தப் படாமலுள்ளது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

மீளாய்வாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபா 1,600,000 பெறுமதியான 07 வேலைத்திட்டங்கள் முற்றாக நிறைவேற்றப்படாதுள்ளது.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

கழிவுப்பொருட்கள் தரம் பிரிக்காது மீள்சுழற்சிக்குட்படுத்தாது குவிக்கப்பட்டு காணப்படுகின்றது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுசெலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 15,366 தொடக்கம் ரூபா 2,034,113 வரையான செலவின வேறுபாடு ஒன்று ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

**4.2 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

உள்ளுராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயல்திட்டத்தின் கீழ் பல நோக்கு மண்டப நிர்மாணிப்பு 2011 தொடர்பான கணக்காய்வு ஐயவினாவிற்கான பதில் இன்றுவரை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.